بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 30.01.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 30 January 2015 (Tamil)**

**அல்லாஹ் எவருக்கும் அவருடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பை சுமத்துவதில்லை என்ற வசனத்திலிருந்து அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவது ஒருவரால் முடியாத ஒன்றல்ல என்பது தெளிவாக புலனாகின்றது. நன்மையின் பக்கம் அழைத்துச் செல்பவர் நற்கூலியைப் பொருத்தவரை அந்த நன்மையைச் செய்தவர் போன்றவரேயாவார். எனவே ஜமாஅத்தாக தொழுபவருக்கு தனது தொழுகையை தொழுவதனால் 27 மடங்கு நற்கூலி கிடைக்கின்ற அதே நேரத்தில் தன்னுடன் எத்தனை நபர்களை அவர் அழைத்து வருவாரோ அவர்களின் நற்கூலியையும் சம்பாதிப்பவராவார்.**

தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் திருக்குர்ஆனில் *'லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா உஸ்அஹா'* (அல்லாஹ் எவருக்கும் அவருடைய சக்திக்கு அப்பாற்பட்ட பொறுப்பை சுமத்துவதில்லை) எனக் கூறுகிறான். எனவே மனிதனுடைய ஆற்றலுக்கு, சக்திக்கு, தகுதிக்கு அப்பாற்பட்ட எந்த கட்டளையையும் வழங்குவதில்லை. எவற்றின்படி செயல்படுவது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாக இல்லையோ அவற்றின்படி செயல்படுவது மனிதனுக்கு கடமையாகிறது. இன்ன கட்டளை எனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என எவரும் சாக்குப்போக்கு கூற முடியாது. அல்லாஹ்வின் மீது ஈமான் இருக்கிறதென்றால், அவனுடைய எல்லா கட்டளைகளும் நமது தகுதிக்குட்பட்டவையாக இருக்கின்றன என்றும் நம்ப வேண்டியது கட்டாயமானதாகும். மேலும் நாம் அவற்றின்படி நமது எல்லா ஆற்றல்களுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்தின் அழகிய போதனை என்னவென்றால், இது கட்டளையாகும். நீங்கள் இதன்படி செயல்பட்டு அதன் உயர்ந்த தரங்களை கண்டிப்பாக பெற வேண்டும்; இல்லையென்றால், இதன்படி செயல்படாததன் காரணமாக நீங்கள் தண்டனைக்குரியவர்கள் ஆவீர்கள் என அல்லாஹ் கூறவில்லை. மாறாக, எல்லா கட்டளைகளின்படி உங்கள் தகுதிக்கேற்ப செயல்படுவது அவசியமானதாகும் எனக் கூறுகிறான். நாம் மனிதனின் இயல்பைப் பற்றி ஆய்வு செய்யும்போது ஒவ்வொரு மனிதனின் நிலைமை வேறுபட்டதாகும் எனவும், அவனுடைய சிந்தனைத் திறன், உடலின் ஆற்றல் ஆகியவை மாறுபட்டவையாக இருக்கின்றன எனவும் தெரிகின்றது.

எனவே அல்லாஹ் மனிதனின் பலவீனங்களை, அவனுடைய நிலைமைகளை, அவனுடைய தேவைகளை முன்னிறுத்தியவாறு தனது கட்டளைகளில் எத்தகைய வளைந்து கொடுக்கும் தன்மையை (அதாவது சலுகைகளை) வைத்திருக்கிறான் என்றால், அதில் குறைவிலும் குறைவான தகுதியும் வைக்கப்பட்டுள்ளன; அதிகத்திலும் அதிகமான தகுதியும் நியமிக்கப்பட்டுள்ளன. எனவே அப்படிப்பட்ட வளைந்து கொடுக்கும்தன்மை (அதாவது சலுகைகள்) இருக்கும்போது நீங்கள் நேர்மையுடன் எனது கட்டளைகளின்படி செயல்படுங்கள் என அல்லாஹ் கூறுகிறான். ஆக, இது மனிதனின் இயல்பை முன்னிறுத்தி வழங்கப்பட்டுள்ள இஸ்லாத்தின் அழகிய போதனையாகும். அல்லாஹ் தனது கட்டளைகளின்படி, போதனையின்படி செயல்பட வேண்டும் என மனிதனை கட்டாயப்படுத்தி இருக்கிறான். நீங்கள் கண்டிப்பாக இதனைச் செய்யுங்கள் எனக் கூறியிருக்கிறான். ஆயினும் அதன் சிறிதினும் சிறிதான தகுதியையும் வைத்து, அதன்படி செயல்படாமல் பிடியிலிருந்து தப்பிப்பவர்களுக்கு சாக்குப்போக்கிற்கான வழியை விட்டு வைக்கவில்லை. உங்கள் நிலைமைக்கேற்ப இது உங்கள் தகுதிகளாகும். அதன்படி எந்நிலையிலும் செயல்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறான். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

‘‘எந்த மனிதனும் அறிவுக்குப் புறம்பான விஷயத்தை ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்தில் இருக்க முடியாது. தாங்கிக் கொள்ளும்ஆற்றல்களுக்கும், தைரியத்திற்கும் அப்பாற்பட்ட எவ்விதமான ஷரீஅத் அளவிலான சுமையும் சுமத்தப்படவில்லை. ***லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா உஸ்அஹா*** என்ற வசனத்திலிருந்து அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவது ஒருவரால் முடியாத ஒன்றல்ல என்பது தெளிவாகிறது. எனவே அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுக்கும் என்னென்ன உறுப்புகளைக் கொடுத்துள்ளானோ, ஆற்றல்களைக் கொடுத்துள்ளானோ அவை அவனுடைய தாங்கும் சக்திக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப தனது கட்டளைகளின்படி செயல்படுவதை மனிதனிடம் அவன் எதிர்பார்க்கின்றான். அல்லாஹ் தன்னைப் பற்றி திகில் உணர்வை ஏற்படுத்துவதற்காக நமக்கு ஏதோ கட்டளையிடுவதற்கு அவன் ஒன்றும் நம்மைப் போன்றவன் அல்லன். மாறாக, அல்லாஹ்வின் அருள்கள் அடியார்களின் மீது எண்ணற்றவையாக இருக்கின்றன. மேலும் அவன் ஒவ்வொருவரிடமும் அவருடைய தகுதிக்கேற்ப அவர் செயல்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். மேலும் அதற்கு எண்ணற்ற நற்பலனை வழங்குகின்றான். எனவே தன் அடியார்களின் மீது இந்த அளவுக்கு கருணை கொண்டவனின் கூற்றுகளுக்கேற்ப மனிதன் தனது தகுதிக்கேற்ப முயற்சி செய்ய வேண்டாமா என்ன? நிச்சயமாக ஓர் உண்மையான நம்பிக்கையாளர் அதற்காக முயற்சி செய்வார். மேலும் முயற்சி செய்யவும் வேண்டும்.

பிறகு இன்னோரிடத்தில் எவருக்கும் அவருடைய சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்துவதில்லை என்பதற்கு விளக்கமளித்தவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘ஒவ்வொருவரிடமும் அவருடைய தகுதிகளுக்கேற்ப நடந்து கொள்ளப்படும். ஷரீஅத் நளினத்தையும், எளிமையையும் வழங்குகிறது. எனவே அல்லாஹ் தகுதிகளுக்கேற்ப செயல்படுங்கள் எனக் கூறி சிறியதிலும் சிறிதான, பெரியதிலும் பெரிதான விஷயங்களின் எல்லைகளை வரையறுத்து விட்டான். மேலும் ஒவ்வொருவரின் சிந்தனைத் திறன், அறிவுத் திறன் ஆகியவற்றின் நிலைமைக்கேற்ப மனித அறிவுக்கும் செயல்களுக்கும் எல்லையை நிர்ணயித்துள்ளான். எவருக்கு எந்த அளவுக்கு திறமை இருக்குமோ அதற்கேற்ப அவர் அந்த ஈமானை எந்நிலையிலும் அடைய வேண்டும். அவன் சிறியதிலும் சிறிய அறிவுக்கும் ஒரு தகுதியை நியமிக்காவிட்டால் பிறகு எல்லா மக்களும் ஈமான் கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்திருக்காது.’’ அதாவது அவர் கண்டிப்பாக ஈமான் கொண்டாக வேண்டும் என்பது கட்டாயமாகியிருக்காது. ‘‘அறிவில் மிக உயர்ந்த தகுதியைப் பெற்ற அதிகமான திறமைபடைத்தவர்கள் மட்டுமே அதற்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க முடியும். ஒருவருக்கு ஒரு விஷயம் புரியவில்லை என்றால், பிறகு அதன்படி செயல்படாததனால் அவர் மீது எந்த குற்றமும் வராது. எனவே இறைவன் குறைந்த அறிவிலிருந்து அதிக அறிவு வரை பல்வேறு படித்தரங்களைப் பொருத்து தகுதிகளை வரையறுத்திருக்கிறான். சிலர் பெரிய அறிவுள்ளவராக இருக்கின்றனர். சிலர் குறைந்த அறிவுள்ளவராக இருக்கின்றனர். சிலரிடம் அதிக திறமைகள், தகுதிகள் இருக்கின்றன.’’ உலக விவகாரங்களிலும் இதே சிந்தனைத் திறனுக்கேற்ப ஒருவர் மிக உயர்ந்த பணியை செய்யும் தகுதியைப் பெற்றிருக்கிறார். அதிகமாக முன்னேறிச் சென்று விடுகிறார். சிலர் நடுத்தரத்தில் இருக்கின்றனர். சிலர் மிகவும் பின்தங்கி இருக்கின்றனர். ‘‘ஆக, கவனம், திறமை என்பது மனிதனை பல்வேறு பணிகளைச் செய்வதன் பக்கம், வெற்றிகளைப் பெறுவதன் பக்கம் இட்டுச் செல்கின்றது என்பது இயல்பான விஷயமாகும்.” ஆக எந்நிலையிலும் எந்த மனிதனும் சரிசமமாக இருக்க முடியாது. அல்லாஹ் அவ்வாறு சரிசமமாகப் படைக்கவேயில்லை. நிலைமைகளும் அவனை சரிசமமானவனாக வைக்க முடியாது. மனிதனுடைய தகுதிகளிடையே வித்தியாசங்கள் இருக்கின்றன.தொடர்ந்து சந்தர்ப்பம் வழங்கப்பட்டாலும் ஒருவர் முன்னேறிச் செல்கிறார்; ஒருவர் பின்தங்கி விடுகிறார். அல்லாஹ்வின் கட்டளைன்படி செயல்படுவதிலும் இதே நிலைதான் இருக்கிறது. சிலர் முன்னேறி விடுகின்றனர்; சிலர் பின்தங்கி விடுகின்றனர். அல்லாஹ் திருக்குர்ஆனில், மக்கள் ஏன் ஈமான் கொள்வதில்லை? ஏன் உங்கள் முடிவை நாசமாக்கிக் கொள்கிறீர்கள் எனக் கேட்கின்றான். ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்று ஏன் மாறவில்லை? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்று ஏன் மாறவில்லை என்று நம்மிடம் கேட்கவில்லை.

ஒரு அறிவிப்பில் வருகிறது: ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு அவர்கள், இரவு பகலில் ஐவேளை தொழுவது கடமை என்றார்கள். அப்போது அவர், இதைத் தவிர வேறு ஏதாவது உண்டா? எனக் கேட்டார். நபி(ஸல்) அவர்கள் இல்லை; நஃபில் தொழ முடியுமென்றால் தொழலாம் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஒரு மாதம் நோன்பிருப்பது கடமை என்றார்கள். அதற்கு அவர், இது தவிர வேறு

ஏதாவது நோன்பு கடமையா? எனக் கேட்டதற்கு, இல்லை; ஆயினும் நஃபிலான நோன்பு வைக்க விரும்பினால் வைக்கலாம் என்றார்கள். இவ்வாறே அவர்கள் ஸகாத்து பற்றியும் கூறினார்கள். அதற்கு அவர், இதைத் தவிர வேறு ஏதாவது ஸகாத் இருக்கிறதா? எனக் கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இல்லை; ஆயினும் நற்கூலிக்காக நஃபிலான முறையில் தருமம் கொடுக்க முடியுமென்றால் கொடுக்கலாம் என்றார்கள். இவற்றைக் கேட்டு விட்டு அந்த மனிதர், இறைவன் மீது ஆணையாக! நான் இதைவிட அதிகமாக்கவுமாட்டேன்; குறைக்கவுமாட்டேன் என்று கூறியவாறு திரும்பிச் சென்று விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இவர் உண்மை கூறுகிறார் என்றால் இவர் வெற்றி பெற்று விட்டார் எனப் புரிந்து கொள்ளுங்கள் என்றார்கள். மேலும் அவர்கள் அவர் வெற்றி பெற்று விட்டார் என்றும் அவருக்காக சுவர்க்கத்தின் நற்செய்தியையும் கூறினார்கள்.

ஆக, இதிலிருந்து இஸ்லாம் ஒவ்வொருவரிடமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் ஈமானைப் போன்ற ஈமானை வேண்டவில்லை. ஒவ்வொருவருக்கென்றும் ஈமானுக்கு பல்வேறு படித்தரங்கள், ஆற்றல்கள் இருக்கின்றன. அதே நேரத்தில் நஃபிலானவை நற்கூலியைப் பெற்றுத் தரும் எனக் கூறப்பட்டுள்ளது. இன்னும் கூறுவதாயின் நஃபில்கள் கடமையானவற்றிலுள்ள குறைபாடுகளையும் நீக்குகின்றன. ஈமான் மற்றும் உறுதிப்பாட்டில் அதிகமாக்குகின்றண. ஆனால் ஒருவருக்கு ஆற்றல் இருக்கிறதோ இல்லையோ அவர் கண்டிப்பாக நஃபில்களையும் நிறைவேற்றியாக வேண்டும் என கட்டாயப்படுத்தவில்லை.

இங்கு இன்னொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் பார்வை நமது உள்ளத்தின் ஆழம் வரை இருக்கிறது. **நமது அறிவு குறைவாக இருந்ததுஎன்றோ, தகுதிகள் குறைவாக இருந்தன என்றோ அவனிடம் எந்தச் சாக்குப்போக்கும் செல்லுபடியாகாது.** எனவே இந்த விஷயத்தை முன்னிறுத்தியவாறு பின்னர் தமது தகுதிகளைப் பற்றி ஆய்வு செய்தவாறு தமது ஈமானையும் செயலையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். **சிறிய தகுதி இதுதான். போதும் நமக்கு விடுதலை கிடைத்து விட்டது என்று கருதிக் கொள்ளக் கூடாது.** நம்மில் பலர் கடமையான தொழுகைகளைக் கூட அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நிறைவேற்றுவதில்லை. ஆண்களுக்கு ஜமாஅத்தாக தொழுவது கடமையாகும். எனவே அல்லாஹ்வை ஏமாற்ற முடியாது என்பதை எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். எவ்வாறு உலக வேலைகளுக்காக முயற்சி நடக்கிறதோ அதை விட அதிகமாக மார்க்க வேலைகளுக்காக முயற்சி செய்ய வேண்டும். மேலும் தகுதிகளை அதிகப்படுத்துவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். **உலக சட்டத்திலாவது ஒருவருடைய சக்திக்கு அப்பாற்பட்ட பொறுப்பு சுமத்தப்பட சாத்தியமிருக்கிறது. ஆனால் மார்க்க விஷயத்தில் அப்படி அல்ல.** குறைந்த பட்ச தகுதி என வரையறுத்த பிறகு ஒருவர் மீது தகுதிக்கு அப்பாற்பட்ட சுமை சுமத்தப்படுகிறது என்ற கேள்விக்கே இடமில்லை. ஆயினும். உலக விஷயங்களில் ஏற்படுவது போன்று ஆன்மீகத்தின் சில விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கும் சில ஆதரவுகள் தேவைப்படுகின்றன. அந்த ஆதரவுகளின் பக்கம் பலவீனமான நம்பிக்கை கொண்டவர்கள் திரும்ப வேண்டும். ஒரு பலவீனமான மாணவன் ஆசிரியரிடமிருந்து ஒரு பாடத்தைப் புரிந்து கொள்வதற்காக மீண்டும் மீண்டும் முயற்சி செய்வதைப் போன்று முயற்சி செய்ய வேண்டும். பிறகு ஆசிரியரின் முயற்சியினால் மாணவனின் தகுதி சிறந்ததாகி விடுகின்றது. ஆனால் ஆசிரியர் உதவி செய்யாவிட்டால் மாணவன் பின்தங்கி விடுகிறான். ஆனால் உதவி செய்யாத ஆசிரியரின் நடத்தையிலிருந்து, அந்த ஆசிரியர் சரியான முறையில் தமது உரிமையை நிறைவேற்றவில்லை; மாறாக, தமது வேலையில் நம்பிக்கை துரோகம் செய்யும் ஆசிரியர் ஆவார் என்பது தெளிவாகி விடுகிறது.

**இங்கு நான் மார்க்கத்திற்காக ஆசிரியராக நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் முரப்பிகள், முபல்லிக்மார்கள் அறிவு படைத்தவர்கள் ஆகியோருக்கும் கவனமூட்ட விரும்புகிறேன்.** அல்லாஹ் அவர்களின் தகுதிகளை அதிகமாக்கியிருக்கும்போது அவர்கள் அவற்றை சரியான முறையில் பயன்படுத்தவும் வேண்டும். மேலும் உங்களின் திறமைகளினால் பலவீனமானவர்களின் திறமைகளை அறிவுப்பூர்வமான முறையில் அதிகமாக்க முயற்சி செய்யுங்கள். ஏனெனில் இது அல்லாஹ்வினால் உங்களுக்கு வழங்கப்பட்ட திறமைகளுக்குஉங்கள் சார்பாக நீங்கள் அவனுக்கு நன்றி கூறுதலாக அமையும். அல்லாஹ்வுக்கு உண்மையான முறையான நன்றி கூறாவிட்டால் மனிதன் பாவியாகி விடுகின்றான்.

எனவே உங்களின் அறிவின் காரணமாக உங்களின் திறமைகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன; அவற்றை உங்கள் சகோதரர்களின் திறமைகளை அதிகரிப்பதற்கு பயன்படுத்துங்கள் என முபல்லிகுகளுக்கும், முரப்பிகளுக்கும் அல்லாஹ் கூறி விட்டான். அல்லாஹ்

கூறுகிறான்: மக்களை நன்மையின் பக்கம் அழைக்கும் பணியைச் செய்யும் ஒரு ஜமாஅத் உங்களிடம் எப்போதும் இருந்து வர வேண்டும். அவர்கள் ஜமாஅத்தின் தர்பிய்யத்தின் பக்கமும் முழு கவனம் செலுத்த வேண்டும். **அவர்கள் மார்க்க ஞானத்தை குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்காகவோ, சொற்பொழிவுகள் அல்லது விவாதங்கள், அல்லது சில நபர்களுக்கு தப்லீக் செய்வதற்காகவோ கற்றுக் கொள்ளவில்லை; மாறாக, தம்மை தொடர்ந்து இந்தப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டிருக்க வேண்டும்.** அது அவர்களின் கடமைகளைச் சேர்ந்ததாகும். நம்மவர்களுக்கும் தர்பிய்யத் வழங்க வேண்டும். அவர்களின் ஈமான், உறுதித்தன்மை ஆகியவற்றில் முன்னேறுவதற்கான வழிமுறையையும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் உலகத்தை நன்மையின் பக்கம் அழைப்பதற்கு புத்தம் புதிய பாதைகளையும் வழிமுறைகளையும் கண்டுபிடிக்க வேண்டும். சிலர் தமது பணிகளின் பக்கம் கவனம் செலுத்துவதற்கு பதிலாக தமது வீட்டிலுள்ள பொறுப்புகளின் பக்கம் அதிக கவனம் செலுத்துகிறார்கள். சிலர் தம் மீது தேவைக்கதிகமாக கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். மேலும் வாரத்தில் 3 நாட்கள் கடைகளில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கின்றனர்.

**வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் தமது சுய விருப்பத்தினால் அல்லாஹ்வின் குரலுக்கு செவிசாய்த்தவாறு தம்மைத் தாமே இந்தப் பணிக்காக அர்ப்பணித்திருக்கிறார்கள். எனவே இந்த ஞானமும், இந்த அர்ப்பணிப்பும் அதற்குரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது.** அந்த ஞானத்தைக் கற்றுக்கொள்வதிலும், கற்றுக் கொடுப்பதிலும் அனைவரும் சரிசமமானவர்களாக முடியாது என்பது உண்மைதான். ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமை இருக்கிறது. ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு சரிசமமான முறையில் பயனளிக்க முடியாது. மற்றவர்களின் தகுதிகளை வெளிக்கொணர முடியாது. மார்க்க அறிவைக் கற்றுக் கொள்வதிலும், கற்றுக் கொடுப்பதிலும் ஒவ்வொருவருக்கும் இருக்கும் திறமை பல்வேறுபட்டதாகும். ஆனால் அதனைப் பயன்படுத்துவதற்கான எவ்வளவு அதிகமான திறமை இருக்கிறதோ அதன் மிக உயர்ந்த தகுதியை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொரும் மெதுவாக முயற்சி செய்வாரென்றால், தமது பலவீனமான சகோதரர்களுக்கு பயனளிப்பவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில் ஜமாஅத்தின் தகுதியையும் உயர்த்துபவர்களாக இருப்பார்கள்.

அவ்வாறே பொறுப்பாளர்கள் இருக்கின்றார்கள். எவர்களுக்கு நாம் ஒரு பொறுப்பைக் கொடுக்க விரும்புகின்றோமோ அந்த நபர்களின் தகுதிகள், அறிவுத் திறன், நம்மை விட சிறந்தவையாகும் எனக் கருதி ஜமாஅத் சகோதரர்கள் அவர்களை பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். **தேர்ந்தெடுக்கும்போது இந்த சிந்தனை இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் அமானத்திற்கான உரிமையை நிறைவேற்றுபவர்களாக இருக்க முடியாது.** இவ்வாறு கடமையை நிறைவேற்றும் உண்மையான நோக்கத்தில் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது குறைந்த பட்சமாகிய இந்த தகுதியை முன்னிறுத்தினால் எவரும் வெறும் பொறுப்பாளர் என்ற அளவில் பெயருக்காக தேர்ந்தெடுக்கப்பட மாட்டார். எப்படி இருப்பினும், **ஜமாஅத்தின் அறிவுத் திறன், மார்க்க முன்னேற்றம் ஆகியவற்றின் தகுதிகளை உயர்த்துவதற்கு முயற்சி செய்வது பொறுப்பாளர்களுக்கும் கடமையாகும்.** அப்போதுதான் ஒவ்வொருவருக்கும் தத்தமது வட்டத்தில் திறமைகள் வளர்ந்து கொண்டே செல்லும். தர்பிய்யத் செயலர் மற்றும் தலைவர் ஆகியோருடன் செயற்குழுவிலுள்ள மற்ற உறுப்பினர்களின் கடமை என்னவெனில், அவர்கள் தமது முன்மாதிரிகள் மூலமாக மற்றவர்களின் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். **உதாரணமாக, மார்க்கம், அறிவு, ஆன்மீக முன்னேற்றம் ஆகியவை உருவாவதற்காக குத்பாக்களைக் கேட்க வேண்டும்; தர்ஸுகளைக் கேட்க வேண்டும்; ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும். இந்த நிகழ்ச்சிகளில் ஜமாஅத் உறுப்பினர்களை அழைத்து வருவதும் பிறகு அந்த குத்பாக்களின் மூலமாகவும், மாநாடுகள் மூலமாகவும் பயன் பெற்று அவர்களுக்கும் நினைவூட்டி வருவதும் பொறுப்பாளர்களின் வேலையாகும்.**

**சில முரப்பிகள் மிக உயர்ந்த முறையில் இந்தப் பணியைச் செய்கின்றனர். எனது குத்பாக்களிலிருந்து குறிப்புகளையும் எடுக்கின்றனர். பிறகு தமது தர்ஸுகளில், தமது கூட்டங்களில் வாரம் முழுவதும் ஏதாவதொரு விஷயத்தை எடுத்து அறிவுறுத்துகிறார்கள். அதனால் ஜமாஅத் சகோதரர்களுக்கும் நல்ல தாக்கம் ஏற்படுகிறது.** ஆனால் பொறுப்பாளர்கள், நாம் ஒரு தர்ஸில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளைப்

படித்துக் காட்டி விட்டோம். அல்லது கலீஃபாவின் குத்பாவைக் கேட்டு விட்டோம். மீண்டும் மீண்டும் தனிப்பட்ட முறையிலும் பல்வேறு கூட்டங்களில் இவற்றை திரும்ப எடுத்துக் கூறுவது அவசியமில்லை அல்லது நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை எனக் கருதி உட்கார்ந்திருப்பார்கள் என்றால் அது தவறாகும். **கலீஃபாவின் அறிவுரையினாலேயே தாக்கம் ஏற்படவில்லை எனும்போது நமது அறிவுரைக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது என்ற எண்ணத்தில் அறிவுரை கூறுவதிலிருந்து நின்றாலும் அது தவறாகும். நினைவூட்டுவது எந்நிலையிலும் அவசியமானதாகும்.**

முதல் விஷயம் என்னவென்றால், சிலருக்கு சில விஷயங்கள் புரிவதே இல்லை.(ஹுஸூர் கூறுகிறார்கள்): ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்களின் மேற்கோள்களை எளிதான முறையில் எடுத்து வைக்க வேண்டும் என நானும் முயற்சி செய்கிறேன். ஆனால் நான் ஆய்வு செய்தபோது, சிலர் எங்களுக்கு புரியவில்லை எனக் கூறுகிறார்கள். அல்லது அவர்கள் புரிந்தது சரியில்லை எனத் தெரிகிறது. எனவே அவ்வப்போது எளிதான சொற்களில் கூட்டங்களில் புரிய வைத்துக் கொண்டிருந்தால் குறைந்த அளவுக்கு புரியும் திறன் கொண்டவர்களுக்கும் புரிந்து விடுகிறது.

ஹுஸூர் கூறினார்கள்: குத்பாவில் கவனத்தை நிலைநாட்ட வேண்டும். குத்பாவுக்கிடையிலும் சில நேரத்தில் சிலர் தூங்கி விடுவதை நான் காண்கிறேன். சிலருக்கு அவர்களுக்கே தெரியும். மேலும் சிலர் சரியான முறையில் கேட்க முடிவதில்லை; சரியான முறையில் கருத்தைப் புரிய முடிவதில்லை. சிலர் தமது சிந்தனைகளிலேயே மூழ்கி விடுகின்றனர். ஆக, இப்படி பலதரப்பட்ட மக்கள் இருக்கும்போது அவர்கள் குத்பாவை கேட்டு விட்டார்கள்; சொற்பொழிவைக் கேட்டு விட்டார்கள் (அது போதுமானது) என கற்பனை செய்வது அவர்களுக்கு என்ன தாக்கம் ஏற்படப் போகிறது? எப்படி இருந்தாலும் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டிய தேவை இருக்கிறது. பின்னர் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும். மாநாடுகளில் சிலர் அக்கம்பக்கதிலுள்ளவர்களை உறங்கக் காண்கிறார்கள்; அல்லது தமது தூக்கத்தை நீக்க விரும்புகிறார்கள். அதற்காக ஒருவேளை முழக்கங்கள் இடுகின்றனர். ஆக, எப்படி இருந்தாலும் சொற்பொழிவைக் கேட்பது, குத்பாக்களைக் கவனமாகக் கேட்பது, அதை உள்வாங்கிக் கொள்வது, அதன் படி செயல்படுவது ஆகிய இவையெல்லாம் தத்தமது தகுதிகளைச் சார்ந்தவையாக இருக்கின்றன. நினைவூட்டல் இருந்து வந்தால் பிறகு தகுதிகளும் மிகச் சிறந்தவையாகிக் கொண்டேயிருக்கின்றன.

பிறகு இஸ்லாம் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் மற்றவர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்பதை கடமையாக்கி இருக்கிறது. இது முரப்பிகள் அல்லது பொறுப்பாளர்கள் ஆகியோரின் பணி மட்டுமல்ல. ஒவ்வொருவரும் தமது பள்ளிவாயில்களுக்கு சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற அண்டை அயலாரை தொழுகைக்காக அழைத்துக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது இஸ்லாத்தின் உண்மையான சகோதரத்துவமும் ஆகும். அவர்களை கவனத்தில் கொள்வது அவர்களுக்கு அவர்களின் கடமைகள் குறித்து கவனமூட்டுவது சகோதரத்துவமும் அன்பும் ஆகும். நம்பிக்கை கொண்டவர்கள் முன்னேறிச் செல்லும்போது அவர்கள் தமது சகோதரர்களையும், வாருங்கள்; இதைப் பெறுங்கள் எனக் கூறியவாறு அவர்களை அழைப்பதும் பலவீனமாவர்களை இழுத்து மேலே கொண்டு வருவதும் அவர்களின் கடமையாகும் என்பதையும் அல்லாஹ் அவர்களுக்கு கடமையாக்கி இருக்கிறான். இந்தப் பணி மனிதனையும் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாக்கும்.

நன்மையின் பக்கம் அழைத்துச் செல்பவர் நன்மை செய்பவருக்குச் சமமான அதே நற்கூலியைப் பெறுகிறார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே ஜமாஅத்தாக தொழுகின்றவருக்கு தனது தொழுகையினால் 27 மடங்கு அதிக நற்கூலி கிடைக்கின்ற அதே நேரத்தில் தன்னுடன் எத்தனை நபர்களை அவர் அழைத்து வந்தாரோ அவர்களின் நற்கூலியையும் சம்பாதிப்பவராக இருப்பார். உதாரணமாக, ஒருவர் தன்னுடன் 3 நபர்களை அழைத்துச் செல்கின்றார் என்றால் அவருக்கான நற்கூலி 27 மடங்குக்கு பதிலாக 108 மடங்கு ஆகி விடும். (அதாவது தனக்கு27 மடங்கு மற்றும் அவர் அழைத்து வந்த அந்த 3 நபருக்கு என மொத்தம் 4 நபருக்கான 27 மடங்கு கூலி 108 ஆகும்.) ஆக, அல்லாஹ் தன் அடியார்களுக்கு அருள் செய்யும் விதத்தையும் பாருங்கள்! எனவே மார்க்க விஷயத்தில் நாம் சுறுசுறுப்பாக இருக்கும் அதே நேரத்தில் மற்றவர்களையும் சுறுசுறுப்பாக இருக்க வைக்க முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் இந்த சிந்தனையுடன் வேலை செய்தால் மற்றவர்களின் தகுதிகளை அதிகமாக்குவதில் பங்கு பெறுபவர்களாக ஆகுவது மட்டுமின்றி, நானும் ஓரிடத்தில் நிற்கக் கூடாது; முன்னேற்றமடைய வேண்டும் என்ற

சிந்தனையுடன் அவரும் முன்னேறிக் கொண்டிருப்பார். மேலும் மற்றவர்களுக்கு நன்மையை ஏற்படுத்திக் கொடுத்து அல்லாஹ்வின் பல மடங்கு நற்கூலிக்கும் உரியவர்களாவார்கள். இந்த சிந்தனை ஜமாஅத்தின் பொதுவான முன்னேற்றத்திற்கும் ஒரு மாற்றத்தை உருவாக்கக் கூடியதாக மாறும். நாம் நமது தகுதிகளை அதிகமாக்கிக் கொண்டே செல்வோமாக. அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கக் கூடியவர்களாகிக் கொண்டே செல்வோமாக. அதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைத்தார்கள். ஒன்று சிரியாவைச் சேர்ந்த ஜனாபா ஜனாலுல்லானீ சாஹிபா. அவர் தற்போது துருக்கியில் இருந்தார். அவர்கள் 23 ஜனவரி 2015 அன்று தமது 57 ஆவது வயதில் வஃபத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இரண்டாவது மக்ஸிகோவைச் சேர்ந்த ஜனாபா ஹபீபா சாஹிபா 19 ஜனவரி 2015 அன்று 100 வயதிற்கும் அதிகமான ஆயுளைப் பெற்று வஃபாத்தாகி இருக்கிறார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர் ஜூன் 2014 அன்று அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக. மேலும் இவர்களின் சந்ததிகளை எப்போதும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்கச் செய்வானாக.

**From: Nazarath Nashr-o-Isha'ath, Qadian, 143 516 Distt Gurdaspur, Punjab**

**Translated By *O.M. Muzzammil Ahmad* For Tamil Desk**